# April 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற ரஷியாவின் பழைமையான மனித உரிமைக் குழுவான 'மெமோரியல்' இயக்கத்தை, அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீவிரவாத அமைப்பு என அறிவித்தது.

(i) இதைத் தொடர்ந்து, ரஷியாவில் அந்த அமைப்பின் அனைத்துச் செயல்பாடுகளும் உடனடியாகத் தடை செய்யப்பட்டன. அதாவது, இனி மெமோரியல் அமைப்புக்கு நிதி வழங்குவது, அதன் செய்திகளை சமூக ஊடகங்களில் பகிர்வது அல்லது அந்த அமைப்புடன் இணைந்து பணியாற்றுவது கிரிமினல் குற்றமாகக் கருதப்படும்.

(ii) இந்த அமைப்பு, ரஷியாவின் இறையாண்மைக்கும், கலாசார, தார்மிக விழுமியங்களுக்கும் எதிராகச் செயல் படுவதாக உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

(iii) முன்னதாக, சோவியத் யூனியன் காலகட்டத்தில் நடந்த அரசியல் அடக்குமுறைகளையும், ஸ்டாலின் ஆட்சியின் மனித உரிமை மீறல்களையும் ஆவணப்படுத்துவதற்காக 1980-களில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.

(iv) கடந்த 2021-இல், உக்ரைன் படையெடுப்புக்கு முன்பே முக்கியப் பிரிவுகள் தடை செய்யப்பட்டிருந்தாலும், தற்போது ஒட்டுமொத்த இயக்கமும் தீவிரவாத அமைப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு அமைதிக்கான நோபல் பரிசை கடந்த 2022- ஆம் ஆண்டு பெற்றது நினைவு கூரத்தக்கது.

(v) இதனிடையே, ரஷியாவின் முன்னணி சுதந்திரப் பத்திரிகையான நோவயா கெசெட்டா அலுவலகத்திலும் பாதுகாப்புப் படையினர் அதிரடி சோதனை நடத்தினர்.

2. இந்தியாவின் இணையவழி சில்லறை வணிகச் சந்தை, கடந்த 2025-ஆம் ஆண்டில் சுமார் 6,500-6,600 கோடி டாலரை (ரூ.6 லட்சம் கோடி) எட்டி புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

(i) ஃபிளிப்கார்ட் நிறுவனத்துடன் இணைந்து பெயின் & கம்பெனி வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் இத்தரவு வெளியாகியுள்ளது. முந்தைய 2024-ஆம் ஆண்டை விட இத்துறை 21 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

(ii) விரைவு வணிகத்தில் முதலிடம்:

- மளிகைப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்களைச் சில நிமிடங்களில் விநியோகிக்கும் விரைவு வணிகத்தில் (குவிக் காமர்ஸ்) இந்தியா உலக நாடுகளுக்கே முன்னோடியாக உருவெடுத்துள்ளது.
- இந்தியாவின் மொத்த இணையவழி விற்பனையில் 17 சதவீதம் இந்த விரைவு வணிகச் சேவை மூலமே நடைபெறுகிறது. இது சீனா போன்ற வளர்ந்த நாடுகளை விட அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் இத்துறை இருமடங்கு வளர்ச்சியடைந்து, 1,100 கோடி டாலர் விற்பனையை எட்டியுள்ளது.

(iii) 2030- க்குள் பிரம்மாண்ட இலக்கு:

- தற்போதைய அபரிமிதமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, வரும் 2030-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் இணையவழி சில்லறை வணிகச் சந்தை 18,000 கோடி டாலர் என்ற இமாலய இலக்கை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- நுகர்வோரின் செலவிடும் திறன் அதிகரிப்பு மற்றும் புதிய வாடிக்கையாளர்களின்

வருகை ஆகியவற்றால் ஆண்டுக்கு சராசரியாக 20 சதவீத வளர்ச்சியை இத்துறை தக்கவைத்துக் கொள்ளும் என்று அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

(iv) முன்னணியில் இருக் கும் 'ஜென் ஸீ தலை முறை:

- இணையவழி வர்த் தகத் தளங்களைப் பயன்படுத்துப் வர்களில் 45 சதவீதம் பேர் 'ஜென்- ஸீ' எனப்படும் இளம் தலைமுறையினராக உள்ளனர். 2025-இல் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆர்டர்களில் பாதிக்கும் மேற்பட்டவை இவர்களுடையது என்பது குறிப்பிடத்தக்கது.
- சமூக வலைதளப் பதிவுகள் மற்றும் உடனடி கடன் வசதிகளைப் பயன்படுத்தி, அழகு சாதனப் பொருள்கள் மற்றும் மின்னணு சாதனங்களை வாங்குவதில் இவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

(v) 2-ஆம் நிலை நகரங்களின் பங்களிப்பு:

- மெட்ரோ நகரங்களைத் தாண்டி, 2-ஆம் நிலை மற்றும் அதற்கும் கீழுள்ள நகரங்கள் இணையவழி வர்த்தகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சி மையங்களாக மாறியுள்ளன. கடந்த ஆண்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு இந்த நகரங்கள் 50 சதவீத பங்களிப்பை வழங்கியுள்ளன.
- தற்போது இணையத்தைப் பயன்படுத்துபவர்களில் 30 சதவீதம் பேர் மட்டுமே இணையவழியில் பொருள்களை வாங்குவதால், வரும் காலங்களில் இத்துறையில் இன்னும் பெரும் வாய்ப்புகள் காத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

3. இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டின் மிக வயதான முன்னாள் வீரராக இருந்த சி.டி.கோபிநாத் (96) சென்னையில் காலமானார்.

(i) டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்த இந்திய அணியின் கடைசி வீரர் கோபிநாத் என்பது குறிப்பிடத்தக்கது. 1952-இல் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற அந்த டெஸ்ட்டில் இந்தியா, இன்னிங்ஸ் மற்றும் 8 ரன்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

4. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் பணி இடத்தை நிரப்ப தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை மத்திய அரசு வரவேற்றுள்ளது. இதுகுறித்து மத்திய பணியாளர் நலத் துறை அமைச்சகம் வெளியிட்ட உத்தரவில் கூறியிருப்பதாவது:

(i) தற்போது மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக உள்ள 1988-ஆம் ஆண்டு பிரிவி ஐஏஎஸ் அதிகாரி பிரவீண்குமார் ஸ்ரீவாஸ்தவா பணி ஓய்வு பெற உள்ளதையொட்டி, அந்தப் பணியிடம் வரும் ஆகஸ்ட் 3-ஆம் தேதி முதல் காலியாக உள்ளது.

(ii) இந்தப் பணியிடத்தை நிரப்ப ஊழல் கண்காணிப்பு, அரசு நிர்வாகம், திட்டங்கள் உருவாக்கம், பொது நிர்வாகம் உள்ளிட்ட துறைகளில் நிபுணத்துவம் மற்றும் பணி அனுபவமுள்ள குடிமைப்பணி அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

(iii) மத்திய அரசு அல்லது மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் குறிப்பாக காப்பீடு, நிதி, வங்கி, சட்டம், ஊழல் கண்காணிப்பு மற்றும் புலனாய்வு துறைகளில் அனுபவமுள்ள அதிகாரிகளும் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். குறைந்தபட்சம் 25 ஆண்டுகள் பணி அனுபவமும், துறைசார்ந்த அறிவும்பெற்றிருக்க வேண்டும்.

5. இந்திய ராணுவத்தில் கட்டமைப்பு ரீதியாக சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு

வருவதாக தலைமை தளபதி உபேந்திர துவிவேதி தெரிவித்துள்ளார். கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் நடைபெற்ற 'ரண் சாம்வாத்' நிகழ்ச்சியில் இதுகுறித்து அவர் பேசியதாவது:

(i) பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையானது, ராணுவத்தின் பல பிரிவுகளும் கூட்டாக இணைந்து செயல்பட்டதை வெளிப்படுத்தியது. நாம் நமது படை பிரிவுகளை (தரைப்படை, விமானப்படை கடற்படை) ஒரே தலைமையின்கீழ் ஒருங்கிணைப்பது அவசியமாகும்.

(ii) 2024-ஆம் ஆண்டு முதல் நமது ராணுவத்தின் பல்வேறு பிரிவுகளும் கூட்டாக பயிற்சி நடத்தி வருகின்றன. இதேபோல் கூட்டாக 2025 ஆகஸ்ட் மாதத்தில் கோட்பாட்டையும் வெளியிட்டன. இது நமது ராணுவ வரலாற்றில் முக்கிய மைல்கல்லாகும். இதன் மூலம் முப்படைகளும் முதல்முறையாக ஒரே திட்டத்தின்கீழ் இணைந்து செயல்பட வழிவகை ஏற்பட்டது.

(iii) இந்திய ராணுவத்தில் கட்டமைப்பு ரீதியாக தற்போது சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் படைப்பிரிவுகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பது உள்ளிட்டவையும் அடங்கும் என்றார்.

6. உலக அளவில் எரி பொருள் விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள சூழலிலும், அதிக அளவில் அந்நியச் செலாவணிக் கையிருப்பு, நிதிச் சுதந்திரம், குறைந்த பணவீக்கம் உள்ளிட்ட போதிய பாதுகாப்பு வளங்களுடன் இந்தியா சிறப்பான நிலையில் உள்ளது. இது, உலகளாவிய சவால்களுக்கு இடையே, பொருளாதார வளர்ச்சிக்கு உதவும்' என்று உலக வங்கி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

(i) தெற்காசிய பொருளாதார மேம்பாடுத்தல் அறிக்கையை உலக வங்கி வெளியிட்ட நிலையில், அது தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் இக்கருத்தை உலக வங்கியின் தெற்காசிய மண்டல இயக்குநர் செபாஸ்டீன் எக்கார்த் இக்கருத்தைத் தெரிவித்தார்.

(ii) அவர் மேலும் கூறுகையில், 'இந்தியா வலுவான கொள்கை ரீதியிலான திட்டங்களையும், அதிக அளவிலான அந்நியச் செலாவணி கையிருப்பையும், நிதிச் சுதந்திரத்தையும் கொண்டுள்ளது. அதோடு, உலகளவில் எரிசக்தி விநியோக பாதிப்பு ஏற்பட்டுள்ள தற்போதைய சூழலிலும், குறைந்த பணவீக்கம், இலக்குகளை எட்டுவதற்கான வலுவான பாதுகாப்பு வளங்களையும் பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்துடனான தடைற்ற வர்த்தக ஒப்பந்தம், புதிய தொழிலாளர் நலன் சார்ந்த திட்டங்கள் உள்ளிட்டவை இந்த வலுவான பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளாகப் பார்க்கப்படுகின்றன. உலகள்வில் மற்ற வளர்ந்துவரும் சந்தைகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவும், அது சார்ந்த பிராந்தியமும் தொடர்ந்து மிகவும் வலுவான, ஒட்டுமொத்த செயல்திறன் மிக்க பிராந்தியமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று தெரிவித்தார்.

(iii) முன்னதாக, உலக வங்கி வெளியிட்ட தெற்காசிய பொருளாதார மேம்படுத்துதல் அறிக்கையில், வலுவான உள்நாட்டு தேவை மற்றும் ஏற்றுமதி துறை சார்ந்த மீள்திறன் காரணமாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி கடந்த 2025- ஆம் ஆண்டில் 7.1 சதவீதமாக இருந்தது 2026-ஆம் நிதியாண்டில் 7.6 சதவீதமாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வரும் 2027-ஆம் நிதியாண்டில் இந்த வளர்ச்சி விகிதம் 6.6 சதவீதமாக குறையும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட உலகப் பொருளாதார வாய்ப்புகள் அறிக்கையில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 6.5 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டதைக் காட்டிலும், தற்போதைய மதிப்பீடு சற்று அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

(iv) இந்தியாவுக்கான உலக வங்கியின் முதன்மைப் பொருளாதார நிபுணர் ஆரோலியன் க்ரூஸ் கூறுகையில், 'இந்தியாவின் ஏற்றுமதிகள் உலகிலேயே மிக உயர்ந்த வரி விதிப்புகளை எதிர்கொண்டபோதும், 2026-ஆம் நிதியாண்டில் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா தொடர்ந்து திகழ்ந்து வருகிறது. கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வருமான வரி மற்றும் சரக்கு சேவைவரி (ஜிஎஸ்டி) விகிதக் குறைப்பு நடவடிக்கைகள், உள்நாட்டு நுகர்வை ஊக்குவித்துள்ளது. அதுபோல, வரி விதிப்புகளால் பாதிப்பைச் சந்திக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட ஏற்றுமதி மற்றும் முதலீடு சார்ந்த துறைகள் எதிர்பார்த்ததைவிட மிகச் சிறப்பாக செயல்பட்டன. இதன்மூலம், இந்தியா வலுவான செயல்திறனையும், மீள்திறனையும் வெளிப்படுத்தியுள்ளது' என்றார்.

7. தகவல் தொழில்நுட்ப (IT) துறையில் நடைபெறும் பெருமளவிலான பணிநீக்கங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவின் (AI) மாற்றத்தை ஏற்படுத்தும் பங்கு குறித்த பகுப்பாய்வு.

(i) காரணங்கள்

- தொழில்நுட்ப மறுசீரமைப்பு: முன்னணி IT நிறுவனங்கள், பாரம்பரிய மென்பொருள் சார்ந்த பணிகளை விட செயற்கை நுண்ணறிவிற்கே (AI) முன்னுரிமை அளிக்கும் வகையில், தங்கள் செயல்பாடுகளைத் தீவிரமாக மறுசீரமைத்து வருகின்றன.
- மூலதனத் திசைதிருப்பல்: தொழில்நுட்ப ஜாம்பவான்கள் தங்கள் நிதி ஒதுக்கீட்டை மனிதவளத்திலிருந்து AI உள்கட்டமைப்புப் பணிகளுக்குத் திசைதிருப்பி வருகின்றனர்; உதாரணமாக, Oracle நிறுவனம் தரவு மையங்களுக்காக (Data Centers) 50 பில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளதுடன், வரும் ஆண்டுகளில் AI மேம்பாட்டிற்காக 150 பில்லியன் டாலர்களைச் செலவிடவும் திட்டமிட்டுள்ளது.
- ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் வீழ்ச்சி: 2025-ஆம் ஆண்டில் மட்டும், ஒப்பந்தப் புதுப்பித்தல்கள் இன்மை, நிதிப் பற்றாக்குறை மற்றும் நிறுவனர்களே தாமாக முன்வந்து விலகிக்கொண்டது போன்ற காரணங்களால் சுமார் 11,000 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மூடப்பட்டன.
- AI குறித்த நிச்சயமற்ற நிலை: AI தொழில்நுட்பமானது தற்போது அழித்துக்கொண்டிருக்கும் வேலைவாய்ப்புகளுக்கு இணையான எண்ணிக்கையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்பதற்கு, தற்போதைய நிலையில் எவ்வித ஆதாரமோ அல்லது உத்தரவாதமோ இல்லை.

(ii) நிகழ்வுகள் (பணிநீக்கம் குறித்த உண்மைகள்: 2025–2026)

- தினசரி உலகளாவிய தாக்கம்: கடந்த மூன்று மாதங்களில், உலகளாவிய IT நிறுவனங்கள் 85,000 வேலைவாய்ப்புகளைக் குறைத்துள்ளன; இதன் சராசரி கணக்கின்படி, ஒவ்வொரு நாளும் 1,000 ஊழியர்கள் தங்கள் வேலைகளை இழந்து வருகின்றனர்.
- Oracle குறித்த ஆய்வு: இந்நிறுவனம் உலகளாவிய அளவில் 30,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்யும் நடவடிக்கையைச் செயல்படுத்தியது; இதில் 12,000 பேர் இந்தியாவில் (பெங்களூரு, சென்னை, ஹைதராபாத் மற்றும் மும்பை போன்ற முக்கிய மையங்களில்) பணிபுரிந்த பொறியியல் பட்டதாரிகள் ஆவர்.
- Amazon: ஜனவரி 2026-இல் மட்டும் 16,000 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்தது; இது, இரண்டு கட்டங்களாக உலகளாவிய அளவில் மேற்கொள்ளப்பட்ட மொத்தம் 30,000 பணிநீக்கங்களில் ஒரு பகுதியாக அமைந்தது.
- IBM: சமீபத்தில் 9,000 பணியிடங்களைக் குறைத்தது.
- TCS: இந்நிறுவனம் தனது பணியாளர்களின் எண்ணிக்கையை 20,000 பேர் அளவுக்குக் குறைத்தது; இது அந்நிறுவனத்தின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையில் சுமார்

2 சதவீதமாகும்.

- இந்தியாவின் முன்னணி நிறுவனங்கள்: கடந்த ஆண்டில், Wipro, Infosys மற்றும் Tech Mahindra ஆகிய நிறுவனங்கள் இணைந்து மொத்தம் 10,000 பணியிடங்களைக் குறைத்தன. * ஆண்டு மொத்தங்கள்: கடந்த ஆண்டில் 50,000 முதல் 60,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் தங்கள் வேலைகளை இழந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது, இந்த நிலை 2026-ல் மேலும் மோசமடையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

(iii) விளைவுகள்

- நிதி நெருக்கடி: வேலை இழப்புகளைத் தொடர்ந்து கடன்களைத் திருப்பிச் செலுத்தப் போராடுவதால், ஆயிரக்கணக்கான தொழில்முறை குடும்பங்கள் கடன் பொறிகளில் தள்ளப்படுகின்றன.
- பேரியல் பொருளாதார வீழ்ச்சி: பெருமளவிலான ஆட்குறைப்புகள் நுகர்வோர் செலவினங்களைக் குறைத்து, பரந்த பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- அரசாங்க வருவாய்: இந்த நெருக்கடியால் அரசாங்கத்திற்கான வரி வசூல் குறைந்துள்ளது.
- வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்கள்: வெளிநாடுகளில் பணிபுரியும் இந்திய வல்லுநர்களிடமிருந்து வரும் வெளிநாட்டுப் பணப் பரிமாற்றங்களில் குறிப்பிடத்தக்க சரிவு ஏற்பட்டுள்ளது.

(iv) தீர்வுகள்

- மனிதனை மையமாகக் கொண்ட உத்தி: நிறுவனங்கள் தகுதிவாய்ந்த பொறியாளர்களின் எதிர்காலத்தை விட லாப வரம்புகளுக்கு முன்னுரிமை அளிப்பதை நிறுத்த வேண்டும்.
- தொழில்நுட்ப மதிப்பீடு: தற்போது கணிக்கப்பட்டுள்ள அளவில் செயற்கை நுண்ணறிவால் மனித உழைப்பை உண்மையிலேயே மாற்ற முடியுமா என்பது குறித்து ஒரு யதார்த்தமான மதிப்பீடு தேவைப்படுகிறது.
- பொறுப்புக்கூறல்: தொழில்நுட்ப நிறுவனங்கள் தாமாக முன்வந்து ஊழியர்களைப் பாதுகாக்காது; எனவே, வெளிப்புறத் தலையீடு அவசியமாகிறது.

(v) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் :-

- பெருநிறுவன மானியங்கள்: மத்திய மற்றும் மாநில அரசுகள் தற்போது தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு குறிப்பிடத்தக்க வரி விலக்குகள், மானிய விலையில் நிலம், மற்றும் மின்சாரம், தண்ணீருக்கான முன்னுரிமை அணுகலை வழங்குகின்றன.
- தொழிலாளர் சட்டங்கள்: அரசாங்கம் இந்தத் தொழில்துறைக்கு வசதி செய்து கொடுத்தாலும், தற்போதுள்ள தொழிலாளர் சட்டங்கள், பெருமளவில் ஆட்குறைப்பு செய்யப்படும் தற்போதைய அலையைக் கட்டுப்படுத்த இன்னும் திறம்படப் பயன்படுத்தப்படவில்லை.
- கட்டாயத் தலையீடு: இந்த நிறுவனங்கள் பெறும் உயர் மட்ட அரசு ஆதரவைக் கருத்தில் கொண்டு, வாழ்வாதாரத்தை இழக்கும் பல்லாயிரக்கணக்கான பொறியாளர்களின் எதிர்காலத்தை அவசரமாகக் கவனிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்.

8. குறிப்பாக நெருக்கடி காலங்களில், வதந்திகளின் அழிவுகரமான தன்மையைப் பற்றிய வரலாற்று மற்றும் பகுப்பாய்வுப் பார்வை.

(i) வதந்திகளுக்கான காரணங்கள்

- சமூக ஊடகத் தளங்கள், பொதுமக்களிடையே தகவல்களை அதிவேகமாகப் பரப்ப அனுமதிக்கின்றன.
- மக்கள் பெரும்பாலும் சரிபார்க்கப்படாத அல்லது பரபரப்பான தகவல்களை, அதன் நம்பகத்தன்மையைச் சரிபார்க்காமல், உற்சாகம் அல்லது கவலையின் காரணமாகப் பகிர்கின்றனர்.
- சாதி அல்லது மத மோதல்களை உருவாக்கும் குறிப்பிட்ட நோக்கத்துடன் வதந்திகள் அடிக்கடி பரப்பப்படுகின்றன. இதன் விளைவாக, சமூக அமைதியின்மை, உயிர் இழப்பு மற்றும் சொத்து சேதம் ஏற்படுகின்றன.
- போர்களின் போது, எதிரி நாடுகள், எதிர்த் நாட்டின் பொதுமக்களிடையே அச்சத்தை விதைக்கவும், அவர்களின் மன உறுதியைக் குலைக்கவும் வதந்திகளை ஒரு தந்திரோபாயக் கருவியாகப் பயன்படுத்துகின்றன.

(ii) காலவரிசை மற்றும் வரலாற்று நிகழ்வுகள்

- இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய வீரர்கள் பாராசூட்டுகள் மூலம் கொல்கத்தாவில் தரையிறங்கியதாக ஒரு வதந்தி பரவியது.
- 1940களின் பெருங்கூட்ட இடப்பெயர்வு: கொல்கத்தா வதந்தியால் பீதியடைந்த ஆயிரக்கணக்கான மக்கள், தங்கள் வீடுகளையும் உடைமைகளையும் கைவிட்டு நகரத்தை விட்டு வெளியேறினர். * செயற்கைப் பற்றாக்குறை (போர்க்காலம்): வரவிருக்கும் உணவுப் பற்றாக்குறை குறித்த வதந்திகள் பரவலான பதுக்கலுக்கு வழிவகுத்து, பல நாடுகளில் செயற்கைப் பஞ்ச நிலைமைகளை உருவாக்கின.
- ஜெயபிரகாஷ் நாராயண் (1979): தலைவர் மும்பை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது, அவர் இறந்துவிட்டதாக ஒரு வதந்தி பிரதமரை எட்டியது; அவர் அதை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். அவர் உயிருடன் இருப்பது கண்டறியப்படுவதற்கு முன்பே சபை ஒத்திவைக்கப்பட்டது.
- மேற்கு ஆசிய நெருக்கடி (மார்ச்–ஏப்ரல் 2026): பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு விலைகளில் மிகப்பெரிய உயர்வு ஏற்படும் என்ற வதந்திகள், கட்டுப்பாடற்ற கூட்டத்தை எரிபொருள் நிலையங்கள் மற்றும் எரிவாயு முகமைகளை முற்றுகையிடச் செய்தன.

(iii) விளைவுகள்

- சமூக வடுக்கள்: வதந்திகள் வெவ்வேறு சமூகக் குழுக்களிடையே நீண்டகால வெறுப்பையும் "பகைமையின் வடுக்களையும்" உருவாக்குகின்றன.
- பொருளாதாரச் சீர்குலைவு: பீதியுடன் பொருட்களை வாங்குவதும் பதுக்குவதும் செயற்கைப் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வுகளுக்கு வழிவகுக்கின்றன. * உலகளாவிய விநியோகச் சங்கிலித் தோல்வி: ஹோர்முஸ் ஜலசந்தி முற்றுகையிடப்பட்டது குறித்த வதந்திகள், எரிபொருள் மற்றும் உயிர்காக்கும் மருந்துகளின் விநியோகத்தில் உலகளாவிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன.
- தேவையற்ற பீதி: வதந்திகள் பெரும்பாலும் குடிமக்களை, நகரங்களை விட்டு வெளியேறுவது அல்லது பதுக்கி வைக்கப்பட்ட பொருட்களுக்காக அதிகப்படியான தொகையைச் செலவிடுவது போன்ற கடுமையான மற்றும் தேவையற்ற நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டுகின்றன.

(iv) தீர்வுகள் மற்றும் தனிப்பட்ட பொறுப்பு

- சரிபார்த்தல்: "யார் பேசினாலும், எல்லாவற்றிலும் உண்மையை அறிவதே ஞானம்"

என்ற திருக்குறளின் ஞானத்தைப் பின்பற்றுமாறு தனிநபர்கள் வலியுறுத்தப்பட வேண்டும். * வதந்தி மையங்கள்: தவறான தகவல்களை எதிர்கொள்வதற்காக, சரிபார்க்கப்பட்ட உண்மைகளை பொதுமக்களுக்கு வழங்க, உலகப் போர்களின் போது அமெரிக்காவும் இங்கிலாந்தும் பயன்படுத்திய மாதிரியைப் பின்பற்றி "வதந்தி மையங்கள்" நிறுவப்பட்டன.

- கடுமையான ஆய்வு: எந்தவொரு உடல்நலம் தொடர்பான அல்லது புவிசார் அரசியல் செய்தியையும் நம்புவதற்கு அல்லது பகிர்வதற்கு முன்பு, அதன் நம்பகத்தன்மையை குடிமக்கள் கண்டிப்பாக சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(v) அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டம் (ESMA) அமலாக்கம்: வதந்திகளால் ஏற்படும் செயற்கையான எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ள, பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயுவின் சீரான விநியோகத்தை உறுதி செய்வதற்காக மத்திய அரசு அத்தியாவசிய சேவைகள் பராமரிப்புச் சட்டத்தை (ESMA) அமல்படுத்தியுள்ளது.
- அதிகாரப்பூர்வ மறுப்புகள்: பாரத் பெட்ரோலியம் மற்றும் ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் போன்ற பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், எந்தப் பற்றாக்குறையும் இல்லை என்றும், குடிமக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் தெளிவுபடுத்தும் அதிகாரப்பூர்வ அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.
- சங்கங்களின் தெளிவுபடுத்தல்கள்: நாடு தழுவிய சமையல் எரிவாயு பற்றாக்குறை குறித்த வதந்திகள் தவறானவை என்று அகில இந்திய எல்பிஜி விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பு முறையாகத் தெளிவுபடுத்தியுள்ளது. சட்டரீதியான தண்டனை: இந்திய தண்டனைச் சட்டத்தின் (BNS) பிரிவு 505-இன் கீழ், பொதுமக்களிடையே பீதியையோ அல்லது குழப்பத்தையோ ஏற்படுத்தும் வதந்திகளைப் பரப்புவது, 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமாகும்